1981 பிப்ரவரி 9]

களுக்கு மொத்தம் எவ்வளவு தேவை என்று கேட்டார்கள். அதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பற்றிச் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கோவில்பட்டி, கழுகுமலை, சாத்தூர், சிவகாசி, சென்னை போன்ற இடங்கள் வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதி. இப்படிப்பட்ட குளோரைட் தட்டுப்பாட்டின் காரணமாக தொழில் முடக்க மாகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப் படுகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் ஏறத்தாழ 5,000 டன்—4,825 டன் அளவிலே, மதுரை மாவட்டத்தில் நரசிங்கப்பட்டி, என்ற இடத்தில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் படுகிறது. 3,000 டன் ஏற்கனவே குறிப்பிட்டதைபோல இராம நாதபுரம் மாவட்டம் புலியூர் என்ற இடத்தில் உற்பத்தி செய்ய இருக்கிறது. இந்த இரண்டு நிறுவனங்களும் முழு அளவில் உற்பத்திச் செய்யும்பொழுது ஓரளவிற்குப் பற்றாக்குறை இல்லா மல் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்பற்றி அரசு பரிசீலிக்கும், நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு என்னென்ன விதிமுறைகள் அரசாங்கத்தால் வரையறுக்கப்பட் டுள்ளன ? இது தனியார் துறையா அல்லது கூட்டுறவு துறையா அல்லது அரசாங்கத் துறையா ? புதிதாக அரம்பிக்கப்படவிருக் கின்ற தொழிற்சாலை கூட்டுறவுத் துறையால் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா அல்லது தனியார் துறையால் ஆரம்பிக்கப்பட இருக் கிறதா ? அல்லது இரண்டும் இணைந்த துறையால் ஆரம்பிக்கப் பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிட்கோ உதவியுடன் என்று அமைச்சர் சொன்னாரே, டிட்கோ என்றால், அரசுத் துறை உதவிதான்.

செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை

*வினா எண் 257—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயற்கை வைரக்கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசிடம் தனியார்கள் அனுமதி கோரி யுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் ?

(இ) அத்தகைய தொழிற்சாலையை அரசே நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இப்படி செயற்கை வைரம் தயாரிக்கின்ற தொழிற்சாலை தென் மாநிலங்களிலே ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வருகின்ற காலங்களிலாவது அப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா ? 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே, அப்படிப்பட்ட தொழிற்சாலை அமைக்க அனுமதி கேட்டு மறுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அவர்களுக்காவது அந்த அனுமதி கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே திருச்சி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் சிறு சிறு வியாபாரிகள் தனியாக அந்த உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அரசுத் துறையிலே நிறுவுவதற்கு எந்த உத்தேசமும் இப்பொழுது இல்லை. தனியார்கள் அதிக அளவிலே யாரும் மனுக்கள் செய்யவில்லை. ஒரே ஒருவர்தான், திரு. தியாகராசன் என்பவர் செயற்கை வைரம் தயாரிக்கும் திட்டம் உள்ளது என்று சொல்லி, டிட்கோவுக்கு மனு செய்தார். அதன் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, 18—2—1980-ல் அவரையும் வரவழைத்து பேசப்பட்டது. அவர் தன்னிடத்திலே அந்தத் தொழிலைத் துவங்குவதற்கான மூலதனம் இல்லையென்றும் அரசே முழுமையாக உதவ வேண்டுமென்றும் கூறினார். அதற்குப் பின்னாலே, அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அது அவராலே சரியான முறையிலே நடத்தப்பட முடியாது என்பதாலே, கைவிடப்பட்டது. அது தவிர வேறு மனுக்கள் வந்ததாக என்னிடத்திலே தகவல் இல்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் வைர மலை மாவட்டம். அந்த மாவட்டத்தில் தடிக்காரன் கோணத்தில் கொத்தளம்பள்ளம் அரசுத் தேக்குத் தோட்டத்தில் கோடிக் கணக்கான............................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது செயற்கை முறையில் வைரம் உற்பத்தி செய்வதைப் பற்றிய கேள்வி.

1981 பிப்ரவரி 9]

திரு மி. வின்செண்ட் : இயற்கை வைரம் வெட்டி எடுப் பார்களா என்று கேட்கிறேன். கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, செயற்கை வைரம் உற்பத்தி செய்வதைப் பற்றி. இயற்கை வைரம் பற்றி கேட்காதீர்கள். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே இந்தச் செயற்கை வைரங்கள் தயாரிக்கக்கூடிய தொழில் திருச்சி மாவட்டத்திலே மிக அதிகமாக நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக் கான மக்கள் அதிலே ஈடுபட்டு, அந்தத் தொழிலைச் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்து, தனியார் வியாபாரிகளிடத்திலே விற்கக் கூடிய நேரத்திலே, சரியானவிலை கிடைப்பதில்லை. அவர்களுக்கு சரியான ஊதியமும் கிடைக்காத காரணத்தாலே, அரசாங்கமே ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டும். அல்லது கூட்டுறவு முறையிலே ஒரு தொழிற்சாலை துவங்க, எந்த அளவு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவு உதவி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தற்பொழுது அது போன்ற திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

ஜவ்வாது மலைப் பகுதியில் பேப்பர் தொழிற்சாலை.

* வினா எண். 258—திரு. இல பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாதுமலை (வட ஆற்காடு) பகுதியில் கிடைக்கும் மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு அங்கு ஒரு காகித தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் ஏராள மான மூங்கில்கள் கிடைக்கின்றன. அங்குள்ள மலைவாழ் மக்களும் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். இதை மனதில் கொண்டாவது, இனிமேலாவது அங்கு ஒரு காகிதத் தொழிற் சாலை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.